தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

சனிக்கிழமை, 1979 ஏப்ரல், 21

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வினாக்கள்—விடைகள்

* உடுக்குறியிட்ட வினாக்கள்

அருணா சர்க்கரை ஆலை, பெண்ணாடம்.

குறுகிய கால வினா எண் 51 திரு. எம். பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலையில் 1978-79ம் ஆண்டிற்கான கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 103.00 என்று பைனல் பில் போட்டு ரூ. 93.00 கொடுத்துவிட்டு மீதியுள்ள ரூ. 10/- ஐ கட்டாய சேமிப்பு செய்யுமாறு ஆலை நிர்வாகம் விவசாயிகளைக் கட்டாயப் படுத்துவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1978-79-ம் கரும்புப் பருவத்துக்கு அருணா சர்க்கரை ஆலை கொடுக்க வேண்டிய சட்டப்பூர்வமான அடிப்படை விலை டன் ஒன்றுக்கு ரூ. 103.50. இதில் ரூ. 10/-ஐ வைப்புத் தொகையாக ஆலை பெற்றுக்கொள்வதாகச் சர்க்கரை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளது. ஆனால் இவ்வாறு கொடுப்பதில் விவசாயிகளை ஆலை கட்டாயப்படுத்துவதாக இதுவரை செய்தி ஏதும் இல்லையென சர்க்கரை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) வைப்புத் தொகையாக பெற்றுக்கொள்ளும் தொகையை 15 சதவீதம் வட்டியோடு 12 மாதங்களுக்குள்ளாகத் திருப்பித் தரப்படும் என ஆலை தெரிவித்துள்ளது. மத்திய அரசின் 1978-ம் ஆண்டு கரும்பு (கட்டுப்பாடு) திருத்த ஆணை பிரிவு 3 (ஏ)ன்படி பதினான்கு நாட்களுக்குள் செலுத்தப்படாத கரும்பு கிரயத்திற்கு 15 சதவீதம் வட்டி கொடுக்க வேண்டும் என்று உள்ளது. எனவே, ஆலை ஏற்கனவே 15 சதவீதம் வட்டி கொடுக்க ஒப்புக் கொண்டுவிட்டபடியால் மாநில அரசு ஏதும் செய்வதற்கில்லை.

[1979 ஏப்ரல் 21

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இருந்து டன் ஒன்றுக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதை திட்டவட்டமாக அறிவித்தார்கள். அது எந்தெந்த அடிப்படை யில் கொடுக்கப்படுகிறது? இப்போது மத்திய சர்க்கார் சில ஆலைகளை எடுத்து நடத்துகிறது. எத்தனை ஆலைகளை மத்திய சர்க்கார் ஏற்று நடத்துகிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, சுகர் ரிகவரி பேசிஸ்ஸில் 8.5 என்கிற சதவிகிதத்தை கட்டுமான அடிப்படையாக வைத்துக் கொண்டு, இப்படி மத்திய அரசு ஒவ்வொரு ஆலைக்கும் தனிப்பட்ட விலையாகக் கொடுத்து வருகிறார்கள். மேலும், இன்று மைய அரசு காவேரி சர்க்கரை ஆலையை ஏற்று நடத்திக்கொண்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே இப்போது கொடுக்கக்கூடிய ரூ. 103/- விவசாயிகளுக்குக் கட்டுப் படியாகவில்லை என்று சொல்லி, அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கிறார்கள். அப்படியிருக்கிறபோது கட்டாயமாக ரூ. 10 பிடித்துக் கொள்வது சரிதானா, பிடிக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போடுமா, பிடித்து இருக்கும் ரூபாயைத் திருப்பி விவசாயிகளுக்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயமாகப் பிடிப்பது என்பது சட்டப்படி சரியாகாது. கட்டாயப்படுத்தக் கூடாது என்பதுதான் விதி முறைகளிலே உள்ளன. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில், அருணா சர்க்கரை ஆலையில் கட்டாயமாக ரூ. 10 பிடித்து வைத்துக் கொண்டார்கள் என்று இன்று வரையில் எந்தவிதமான புகார் மனுவும் வரவில்லை. அப்படி கட்டாய மாகப் பிடிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அரசின் கவனத் திற்குக் கொண்டு வந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படும்.

சக்தி சர்க்கரை ஆலை.

குறுகியகால வினா எண் 52 திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சக்தி சர்க்கரை ஆலைப் பகுதியில் விளைந்துள்ள கரும்பை ஆலை எடுத்துக் கொள்ள மறுத்ததினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?